**இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை-42**

**அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திரு. கொ. செந்தில்வேல், B.E.,**

செ.மு.ஆணை எண் அ2/ 1398 / 2021 நாள் 08.2.2021

பொருள் - பணியமைப்பு -மோ.வா.ப.துறை - இத்துறையின் சென்னை, அரசு மத்திய தானியங்கி பணிமனையில் மெக்கானிக் கிரேடு-II-ஆக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 14.10.2007ல் மறைந்த திரு. C. துரைசாமி என்பவரது மகனான திரு. D. செந்தில்குமார் என்பவருக்கு கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கியது - இளநிலை உதவியாளர் பதவியில் அன்னாரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை(நிலை) எண். 560 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977
2. அரசாணை(நிலை) எண். 73 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.10.1983
3. அரசாணை(நிலை) எண். 61 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 19.07.2016
4. இயக்குநரின் செயல்முறை ஆணைகள் அ2 / 16008 / 2010 நாள் 18.07.2019
5. அரசாணை எண். 80. தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016
6. அரசாணை எண் 100 பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 1.8.2018
7. இயக்குநரக ஊ பிரிவு கடித எண் ஊ4/10803 / 2020 நாள் 01.10.2020

.........

பார்வை 1 முதல் 3 வரையான அரசாணைகளின் படி பார்வை 4ல்காணும் இயக்குநரது செயல்முறைகள் வாயிலாக இத்துறையின் சென்னை, அரசு மத்திய தானியங்கி பணிமனையில் மெக்கானிக் கிரேடு-II-ஆக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 14.10.2007ல் மறைந்த திரு. C. துரைசாமி என்பவரது மகனான திரு. D. செந்தில்குமார் என்பவரை இத்துறையின் சென்னை, இயக்குநரகத்தில் கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. D. செந்தில்குமார், இத்துறையில் 24.07.2019 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 5 மற்றும் 6ல் காணும் அரசாணைகள் வாயிலாக அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்குட்பட்ட பதவிகளில் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நபர்களது பணியினை அந்தந்த துறைத்தலைவர்களே பணிவரன்முறை செய்சய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும், பார்வை 7 ல் காணும் பிரேரணையைத் தொடர்ந்தும், திரு. D. செந்தில்குமார் என்பவர் கருணையடிப்படையிலான பணிநியமனத்திற்கு தேவையான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும்

அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில், அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 24.07.2019 முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டாண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-) கொ.செந்தில்வேல்
இயக்குநர்

இணைப்பு : மேற்படி நபரது பணிப்பதிவேடு(one bound register)

பெறுநர்

திரு. D.செந்தில்குமார், இளநிலை உதவியாளர், இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை-42

நகல்
துணை இயக்குநர்(நி), இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை - 42
ஊ பிரிவு கண்காணிப்பாளர் / ஊ4 இருக்கையாளர், இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை-42
(திரு. D.செந்தில்குமார், இளநிலை உதவியாளரது பணிப்பதிவேடு(1 தொகுதி) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.)
நகல் - அ2.இ.கோ.

/ஆணைப்படி/

துணை இயக்குநர் (நிர்வாகம்)
8/7/2021